உ
சிவமயம்



வட்டு ~ மேற்கு ~ வட்டுக் கோட்டை
சிவன்கோவிலடியை பிறப்பிடமாக கொண்ட

# அமரர் திரு. நாகமணி செல்லத்துரை

அவர்கள்

**இறைவன் திருவடியெய்தியதையிட்டு வெளியிடப்படும்**

# நினைவு மலர்

**06-06-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காம்

# அமரர் நாகமணி செல்லத்துரை அவர்கள்

(புகையிரத நிலைய பரிசோதகர்)

இறைவன் திருவடி அடைந்த, 17ம் நாள்

## நினைவு மலர்

**06-06-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்



வட்டு மேற்கு சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நாகமணி செல்லத்துரை அவர்கள் 21-05-2003 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவர் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், அன்பும், பாசமும் நிறைந்த கணவனாகவும், அன்புடன் அறிவூட்டிய தந்தையாகவும் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்தித்து அன்னார்தம் பாதங்களுக்கு இம்மலரை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்ஙனம்,
மனைவி, மகன், மருமகள்,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வட்டுக்கோட்டை மேற்கு, சிவன் கோவிலடி

# அமரர் திரு. நாகமணி செல்லத்துரை

அவர்கள்

(புகையிரத நிலைய பரிசோதகர்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 20-11-1926 | 21-05-2003 |

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சுபானு வைகாசித்திங்கள் புதன் தனில்
பூண்ட அபரபக்க தேய்பிறை சஷ்டி திதிதனில் - சிவ
பக்திநிறை நாகமணி செல்லத்துரை என்னும் சீரான்
இறைவனடி சேர்ந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் நாகமணி செல்லத்துரையின்
## வாழ்க்கைக் குறிப்பு
(புகையிரத நிலைய பரிசோதகர்)

அமரர் திரு. நாகமணி செல்லத்துரை அவர்கள் வட்டு – மேற்கு சிவன் கோவிலடி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் வட்டூரில் உள்ள பட்டங்கட்டிமார் என்னும் சிறந்த வம்சத்தைச் சேர்ந்தவர். இவரின் முன்னோர்கள் பல கலைகளிலும் சிறந்தோராக விளங்கினர். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருநாவுக்கரசு வித்தியாசாலையிலும், பின்பு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் S.S.C வகுப்புவரை படித்துள்ளார். இவர் நல்ல சமய அறிவு உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது சிறுவயதிலே தந்தையாரை இழந்துள்ளார். இவருக்கு நாகராஜா என்னும் சகோதரரும் இருந்தார். இவர்கள் இருவரும் தாயாரின் அணைப்பிலே வாழ்ந்து வந்தனர். தனது கணவரை சிறுவயதிலே இழந்ததினால் அவரின் பெற்றோரும், உறவினரும் அவருக்கு பாதுகாப்பாகவும், பிள்ளைகளுக்கு உறுதுணையாகவும் இருக்க நினைத்து முருகர் சின்னத்தம்பி என்னும் சீமானை திருமணம் முடித்து வைத்தனர் இவர் தனது மூத்த பிள்ளைகளாக கருதி இருவரையும் சிறப்புடன் வளர்த்து வந்தார். அவருக்கும் தினைப்புனவள்ளி, மகாவிஷ்ணு, தனலட்சுமி என்னும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். எல்லோரும் ஒரே தாய், தந்தை பிள்ளைகளாய் வளர்ந்து வந்தனர். சிறிய தந்தையாரை தமது ஐயா என்றே கூறி வந்தனர். அவரும் தனது பிள்ளைகள் போல் வளர்த்து வந்தார். அவரின் கட்டுப்பாட்டில் வளர்ந்ததினால் நல்ல குணத்துடனும், பக்தியுடனும் வளர்ந்து வந்தார்கள்.

இவர் தனது தாயாரின் தாய் மாமன் திரு சிவபெருமான் (சாமியார்) அவர்களின் உதவியுடன் புகையிரத சேவையில் சேர்க்கப்பட்டார். தனது வேலையில் கண்ணும் கருத்துமாக கடமையே சிறப்பென செய்து வந்தார். சக ஊழியர்களுடன் சகோதரன் போல் நடந்துள்ளார். தனது தம்பியாரையும் (நாகராசா) புகையிரதசேவையில் சேர்த்துக்கொண்டார். தனது தாயாரை தெய்வமாக நினைத்து காப்பாற்றி வந்துள்ளார். தனது சிறிய தந்தையாரையும் இழந்ததினால் எல்லாச் சகோதரர்களையும் தனது எண்ணத்தின் கீழ் வழி காட்டியாக இருந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒரு சிவதொண்டன், சிவ பெருமான்மேல் பக்தி உள்ளவராக இருந்தார். குறிப்பாக இவரின் முன்னோர் வீரபத்திரர் என்னும் தெய்வத்தையே வழிபட்டு வந்தனர். இவரும் அத்தெய்வத்தை வழிபட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. ஒரு முறை என்னோடு சிவயோக சுவாமியை சந்திக்க வந்துள்ளார். அப்போது சுவாமிகள் இவரைப் பார்த்து நீ உமது வீட்டுக்கு பக்கத்திலுள்ள சிவனை வழிபட்டு தொண்டு செய்யடா அவரே உம்மை காப்பாற்றுவார் பயப்படாதே என்று கூறினார். அப்போது அவரின் காலில் விழுந்து அழுது ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார். அத்தோடு எம் இருவரையும் இணைபிரியாது இருக்க வேண்டுமென்று கூறி சிவதொண்டு செய்தாலே இப்பிறவியை வெல்லமுடியும் என்று கூறினார். இவர் தனது வாழ்க்கையில் எத்தனையோ இடர்களைச் சந்தித்துள்ளார். அப்படியிருந்தும் சிவன் செயலால் எல்லாம் நீக்கப்பட்டுள்ளது. இவரின் இணைபிரியாத சினேகித முறையால் யானும் ஈர்க்கப்பட்டு இவரின் சகோதரியை திருமணம் செய்ய வேண்டியதாக இருந்துள்ளது. இவர் இராசா, சின்னம்மா தம்பதிகளின் மகள் சரஸ்வதிதேவியையும் எனது யோசனைப்படி திருமணம் செய்து கொண்டார். பல வருடங்களாக பிள்ளையில்லாது சிவனையே வேண்டி விரதம் இருந்தார். திருகோணமலை திருக்கோணேசப் பெருமானை வேண்டி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுக்கொண்டார். அவருக்கு சோமஸ்கந்தர் என்னும் பெயரை திருநாமமாக வைத்துள்ளார்.

தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து தனது 55வது வயதில் ஓய்வு பெற்றுக்கொண்டார். இவரது சகோதரன் நாகராஜாவும் தனது சிறிய சகோதரிக்கு நல்ல வாழ்வு அமைய வேண்டும் எனநினைத்து நாகரத்தினம் மகள் உலக நாயகியைத் திருமணம் செய்து அவருடைய அண்ணன் சிதம்பரநடராஜனை தனது சகோதரி தனலட்சுமிக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் அவரும் தனது சிறுவயதிலேயே இறைவனடி சேர்ந்துள்ளார். ஆகவே அமரர் திரு. செல்லத்துரை என்பவர் தனது 77வது வயதில் இறைவன் அடிசேர்ந்துள்ளார். இவர் நாட்டின் நிலைமை கருதி தனது மகன், மனைவியுடன் கொழும்பில் வசித்து வந்துள்ளார். இன்னேரத்தில் கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரரில் பக்திமிகுந்தவராக காணப்பட்டார். என்நாளும் இறைவன் சந்நிதானத்திலேதான் தனது வாழ்நாளை கழித்துள்ளார் என்பது சிறப்புக்குரியதாகும். அன்னாரின் ஆன்மா சிவன் கழல் சேர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு<br>
சிவநெறிச் செம்மல் இரா. சத்தியவான்<br>
(மைத்துணர்)<br>
(அதிபர்)<br>
அறநெறிப் பாடசாலை - முகத்துவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும், உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமும் வேதமு மோது நாவர்
அந்தணர் நாளும டிபரவ
மங்குல்ம திதவழ் மாடவீதி
மருகணிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல்வி ளங்கெரி யேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

## திருவாசகம்

பண்சுமந்தபாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்திவிறல் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன் மேனி பாடுதுங்காண் அம்மானே

அரசே பொன்னம்பலத்தில் ஆடும் அமுதே
என்றுன் அருள்நோக்கி
இரைசேர் கொக்கொத்திரவு பகல்
ஏசற்றிருந்தே ஏசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறக்க
காட்சிகொடுத்துன் அடியேன் பால்
பிரைசேர் பாலில் நெய்போலப் பேசாதிருந்தால் ஏசாரோ.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணாநாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னை பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்
பெற்றதார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா நீஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்

## திருப்புகழ்

பத்தியால் யான்உனை பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமாதான சற்குண நேசா
ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசக்தி நிபாதா
வெற்றிவேல் ஆயுதப் பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமதாக வந்து புவிமீதுகாலன்
அணுகா திசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத ஞான
நடைமே புரிந்து வருவாயே
ஆரமுதமானதந்தி மணவாளா ஆறுமுகம்
ஆறிரண்டு விழியோனே
சூரர் கிளைமாழ வென்ற கதிர் வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே

கணபதி துணை
ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டும் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்



நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணி தன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் ணுதலான் தன்கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசவருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

-திருச்சிற்றம்பலம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகளின் திருப்பாடல்கள்

நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நினைவுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவாகச்சி ஏகம்பனே.

பிறக்கும் பொழுதுகொடு வந்ததில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுதுகொடு போவதில்லை இடைநடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக் கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

ஐயுந் தொடர்ந்து விழியும் சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

## கந்தர் அலங்காரம்

நாள் என்செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடிவந்த
கோள் என்செய்யும் கொடுங் கூற்றென்செயும் குமரேசரிரு
தாளும் சிலம்புஞ் சலங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடிலே.

## கந்தர் அநுபூதி

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்து எனையாள்
கந்தா கதிர்வேல் அவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## அபிராமி அந்தாதி

ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேத்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வுஅறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

~திருச்சிற்றம்பலம்~

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளுந்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவார்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள் நற்சிந்தனைகள்

1. சிவனை யல்லாமல் தேவருமில்லை
சிவனை யல்லாமல் சீவருமில்லை
சிவனை யல்லாமல் தேகமுமில்லை
சிவனை என் சித்தத்துட் கண்டுகொண்டேனே

2. நகரத்துள்ளே நான் முகனானான்
மகரத்துள்ளே மாலவ னானான்
சிகரத்துள்ளே சிவனாய் நின்றான்
வகரத்துள்ளே அருள்வடி வானானே

3. சிவபக்தியாலே சிந்தை குவிந்தது
சிவபக்தியாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தியாலே சிந்தை இறந்தது
சிவபக்தியாலே சீவன் முத்தியே

4. அஞ்செழுத் தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத் தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கி நின்றேன்

5. ஆறாறுக்கப்பால் ஆனந்தக் கூத்து
ஆறாறுக்கப்பால் ஆனந்த வீடு
ஆறாறுக்கப்பால் ஆர்தான் ஈடு
ஆறாறுக்கப்பால் சென்றோரைக் கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அஞ்செழுத்தாலே அரனடி காணலாம்
அஞ்செழுத்தாலே அகிலத்தை ஆளலாம்
அஞ்செழுத்தாலே அகவினை தீர்க்கலாம்
அஞ்செழுத்தும் என் நெஞ்சம் புகுந்ததே

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

**ஓம்**

பூர்வ புவ ஸ்வஹா
தத் ஸவித்தூர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஹ் ப்ரச்சோதயாத்

ஓம்–பரப் பிரம்மம் பூர்வ – பூலோகம் (மெய்வாகனம்) ஐந்து பூதங்களாகிய இவ்வுடம்பையும் குறிக்கும். ஐந்து பூதங்களான, நிலம், நீர், ஆகாயம், தீ, காற்று ஆகிய பிரகிருதி (இயற்கை) புவ – புவர்லோகம் மத்தியலோகம் இது பிராண சக்தியையும் குறிக்கும். பிரக்ஞானமே பிராண சக்தியை உடம்பை இயக்கச் செய்கிறது. இதனாலேயே பிரக்ஞானத்தை பிரக்குணப்பிம்மம் என்கிறது வேதம் (சாட்சியாய் அமையும் பிரமம்) ஸ்வஹா – சுவர்க்கலோகம் – (தேவர்களின் உலகம்) தத் – பரமாத்மா – கடவுள் பிரஹ்மன் ஸ்வித்தூ – இத்தகைய எல்லாத் தோற்றங்களையும் தோற்றுவித்து வரணேயம் – வழிபடுவதற்குரிய வஸ்து– பர்கோ – ஒளிக்கதிர் ஆன்மீக ஒளி (அஞ்ஞானத்தை அழித்து ஞானமளிக்கும் ஒளி) தேவஸ்ய – தெய்வீக உண்மையாக விளங்குகின்ற – தீமஹி – நாம் தியானிப்போமாக – தியோட புத்தி (புத்திக்கூர்மை) யோ – எது, ந – எங்களது – பிரச்சோதயாத் – பிரகாசிக்கச் செல்வாயாக.

| | | | |
|---|---|---|---|
| **ஓம்** | - | **அ + உ + ம்** | **(பிரணவ மந்திரம்)** |
| **சிவாயநம** | - | **சிவனுக்குரிய மந்திரம்** | **(ஞானத்துக் உரியது)** |
| **நமசிவாய** | - | **பஞ்சாட்சர மந்திரம்** | **(உலக வாழ்வை அளிக்கும்)** |
| **சரவணபவ** | - | **சடாஷ்சரமந்திரம்** | **(ஆறு எழுத்து மந்திரம் முருகனுக்குரியது)** |
| **ஓம் கம் கணபதியே நம** | – | **விநாயகருக்குரியது** | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமசிவாய மந்திர விளக்கம்

| | | |
|---|---|---|
| ந | - | திரோதான சக்தி |
| ம | - | மலம் |
| சி | - | சிவன் |
| வ | - | சக்தி |
| ய | - | ஆன்மா |

ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
மருத்யோர் மா அம்ருதம்கமய
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(பொய்யினின்று என்னை மெய்மைக்கு இட்டுச் செல்வாயாக அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஜோதியின் கண் எடுத்துச் செல்வாயாக மரணத்தை அல்லது பிரபஞ்சத்தை விட்டு மரணமிலாப் பெருவாழ்வளிக்கும் பரத்தை நாடிச் செல்ல அழைத்துச் செல்வாயாக)

பிரகதாரண்ய உபநிடதம்


**தினமும் மேற்கூறிய மந்திரங்களை 11 முறை காலையும், மாலையும் ஓதிவரின் சிவனிலையை அறிந்து திருவருள் பெற முடியுமெனக் கூறி கொள்கின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நன்றி நவிலல்




கடந்த 21-05-1003ல் இறைவனடி சேர்ந்த எமது அன்புக்கும் பாசத்திற்குமுரிய குடும்பத் தலைவர். அமரர். திரு. நாகமணி செல்லத்துரை அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், ஈமைக்கிரியைகளிலும், இறுதியாத்திரையிலும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலமும், தபால் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அந்தியட்டி, சபீண்டிகரனக் கிரியைகளிற் கலந்து கொண்டோர்க்கும், இந் நினைவு மலரை அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், தொகுத்து உதவிய சிவ தொண்டர். திரு. இரா. சத்தியவான் அவர்களுக்கும் மற்றும் ஏனைய உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படிக்கு,
மனைவி, மகன், மருமகள் மற்றும்
சகோதரர்கள்.

360/16, அலுத்மாவத்தை வீதி,
கொழும்பு 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org